மாவட்ட நகர் ஊரமைப்பு துறை (DTCP) ஈரோடு மாவட்டம்
சத்தியமங்கலம் நகராட்சி

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சத்தியமங்கலம் நகராட்சி, வரதம்பாளையம் கிராமம், (பழைய ச.எண்:334/1பா) வார்டு-A, பிளாக்-16, ந.அ.எண்:9/3-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1 : 400

இணையவழி விண்ணப்ப எண்: B1I7T1E4 & நாள்: 08.08.2022



விஸ்த்தரிப்பு



குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1983.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 03

மனைப்பிரிவு எல்லை

நிலையிலுள்ள சாலை

பொதுஒதுக்கீடுகள்

(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 322.66 ச.மீ

பூங்கா = (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10%

= (1983.00 - 322.66) x 10%

பூங்கா பரப்பு = 166.03 ச.மீ (10.00%) (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை செலுத்தப்பட்டுள்ளது.)

பொது உபயோகம் (தேவையான அளவு) : 8.30 ச.மீ (0.50%)

பொது உபயோகம் (A) : 9.30 ச.மீ (0.56%)

சாலைகள், பொது உபயோகம் பரப்பு தான ஆவணம் எண்: 7498/2022 , நாள்: 20.09.2022 -ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

பொது உபயோகம் (B) : 9.38 ச.மீ (0.57%)

TANGEDCO பரப்பு தான ஆவணம் எண்: 7499/2022 , நாள்: 20.09.2022 -ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

கட்டிட வரம்பு: 9.00 மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்
9.0 மீ க்கு மேல் 18.00 மீ வரை உள்ள சாலைகளுக்கு 3.00 மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு : 12.00 மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.50மீ x1.50மீ விடப்படல் வேண்டும்
12.00 மீ க்கு மேல் 30.50 மீ வரை உள்ள சாலைகளுக்கு 4.50மீ x4.50மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ல் தெரிவுத்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி , மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் மின்கம்பங்கள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்க்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கபடல் வேண்டும்.

2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்..

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்பதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) வட்டார வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

Signature Not Verified

Signed by: Assistant Director
Location:Erode
Date:2022.10.20 17:32:37

SWP/ DTCP/ ERODE/ LAYOUT APPROVAL No: 35/2022

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (மு.கூ.பொ),
ஈரோடு மாவட்ட அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.